**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**MCOP No. 564 of 2022**
**Deposition of Witness for : RW 1**

| | | |
|---|---|---|
| Name | : | ரங்கசாமி |
| Father/Husband Name | : | வெள்ளிக்கண்ணு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | ------ |
| Calling | : | |
| Religion | : | ------ |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11.02.2026

**முதல் விசாரணை**

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் கடந்த 2 ஆண்டுகளாக திருவண்ணாமலை கோட்ட அலுவலகத்தில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என் தரப்பில் முதன்மை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. அதில் இடப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. புலனாய்வு அறிக்கை அலுவலக நகல் எ.ம.சா.ஆ.1,

2. பாலிஸி நகல் எ.ம.சா.ஆ.2

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை** -

இந்த விபத்து குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். கோப்புகளை பார்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கு விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். இறுதி அறிக்கை 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தான் மேற்படி விபத்து குற்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமானது எங்களுடைய நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு விபத்து சமயத்தில் காப்பீடு அமுலில் இருந்தது என்றால் சரிதான். 3ம் தரப்பு காப்பீடு மட்டும் அமுலில் இருந்தது. மேற்படி விபத்து வாகனத்தில் நாங்கள் முதலில் 1 + 5 ஆண்டு

பண்டில்டு பாலிஸி கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். பண்டில்டு பாலிஸி விதிமுறைப்படி 3ம் தரப்பினா், வாகன ஓட்டுநா், வாகனத்தின் பின்னால் அமா்ந்து செல்பவா் மற்றும் வாகனத்திற்கு ஏற்படும் சேதாரம் ஆகிய அனைத்திற்கும் காப்பீடு பொருந்தும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கு பாலிஸியில் வாகன உரிமையாளா் மற்றும் வாகனத்தின் பின்னால் அமா்ந்து செல்பவா்கள் உள்அடங்கவில்லை. காப்பீட்டு ஒப்பந்தம் எங்களுக்கும், 1ம் எதிா்மனுதாரருக்கும் இடையிலானது என்றால் சரிதான் மேலும் 1ம் எதிா்மனுதாரரின் பிரதிநிதிகளுக்கும் பொருந்தும். மேற்சொன்ன சங்கதி எ.ம.சா.ஆ.2ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால் எ.ம.சா.ஆ.2ல் நிபந்தணை பத்தி 9ல் அவ்வாறு கண்டுள்ளது. நிபந்தணை பத்தி 9 பாலிஸி பெற்றவா் இறந்து விட்டால் அவரது வாரிசுதாரா்கள் அவருக்காக நிவாரணம் கோருவதற்கு வழிவகை உள்ளது பற்றி தான் அவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது, நான் சொல்வது போல் காப்பீட்டு ஒப்பந்தம் 1ம் எதிா்மனுதாரின் பிரதிநிதிகளுக்கு பொருந்து என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பாலிஸி ஒப்பந்தம் ஐ.ஆா்.டி.ஏ நிபந்தனைகளுக்கு உட்பட்டு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஐ.எம்.டி. நிபந்தனைகள் எ.ம.சா.ஆ.2ல் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாகன உரிமையாளா் மற்றும் வாகனத்தின் பின்னால் அமா்ந்து செல்பவா்களை உள்ளடக்கி பாலிஸி எடுத்திருந்தால் மட்டுமே ஐ.எம்.டி விதி பொருந்தும். ஐ.எம்.டி. நிபந்தனைகள் இணைத்து தான் பாலிஸி தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு இணைக்காததால் எ.ம.சா.ஆ.2 ஒரு முழுமையான பாலிஸி ஆகாது என்றால் சரியல்ல. நாங்கள், வாகன உரிமையாளா் மட்டுமே ஒப்பந்தத்தின் தரப்பினா் என்றும், மற்ற நபா்கள் அனைவரும் 3ம் தரப்பினா் என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்த இருசக்கர வாகனத்தின் பின்னால் அமா்ந்து சென்றவா் 3ம் தரப்பினா் என்றும், வாகனத்தை பயன்படுத்தும் போது இறந்தவா் என்பதால் அவருக்கு இழப்பீடு கொடுக்க எங்கள் நிறுவனம் கடமைபட்டது என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.